# பொது (மறுவாழ்வு)த் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2026 – 2027

## மானியக் கோரிக்கை எண். 38


**க. தென்னரசு**
வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை
அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2026

# பொருளடக்கம்


| வ. எண். | தலைப்பு | பக்கம் எண் |
| --- | --- | --- |
| 1. | முன்னுரை | 1–3 |
| 2. | அயலகத் தமிழர்கள் நலன் | 3–38 |
| 3. | முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள் நலன் | 39–61 |
| 4. | தாயகம் திரும்பியோர் | 61–64 |
| 5. | அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் | 64–67 |
| 6. | முடிவுரை | 67–69 |

**பொது (மறுவாழ்வு)த் துறை**
**கொள்கை விளக்கக் குறிப்பு**
**2026–2027**

# அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை

## 1. முன்னுரை

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம், இலங்கைத் தமிழரின் நலன், அயலகத் தமிழர் நலன் மற்றும் தாயகம் திரும்பியோரின் மறுவாழ்வினை பேணி பாதுகாத்திடுவது தொடர்பான பணிகளை செயல்படுத்தி வருகிறது. இவ்வாணையரகம் தலைமைச் செயலகத்தின் பொது மற்றும் மறுவாழ்வுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. மறுவாழ்வு ஆணையரகம் 1969–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அதன்மூலம் பர்மா, வியட்நாம், இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய இந்திய வம்சாவழியினருக்கான நலத்திட்டங்கள் மற்றும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

3,04,269 இலங்கைத் தமிழர்கள் இலங்கையில் மூண்ட உள்நாட்டுப் போர், இனக்கலவரம் காரணமாக

1983–இல் தொடங்கி பல்வேறு காலகட்டங்களில் அகதிகளாக தமிழ்நாட்டிற்கு வந்தனர். இலங்கைத் தமிழர்களுக்கான நிவாரணப் பணிகள் அந்நாள் முதல் இத்துறையின் வசம் ஒப்படைக்கப்பட்டன.

கல்வி, வணிகம் மற்றும் வாழ்வாதாரத்திற்கான வேலைவாய்ப்பினைத் தேடி தமிழர்கள் பன்னெடுங்காலமாக உலகின் பல்வேறு நாடுகளுக்கும் புலம் பெயர்ந்து வருகின்றனர். இவ்வாறு, புலம்பெயர்ந்த அயலகத் தமிழர்களின் நலன்களைப் பேணிப் பாதுகாத்திட 2010–ஆம் ஆண்டு மறுவாழ்வுத் துறை இயக்குநரகம் "அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரகம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இவ்வாணையரகம் "அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகம்" என 2021–ஆம் ஆண்டு மீண்டும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம், அரசின் தொலைநோக்குத் திட்டத்தின்படி, வெளிநாடுகளில் பாதிக்கப்படும் அயலகத் தமிழர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குப் போதுமான உதவிகளைச் செய்திடவும், வெளிநாடுகளில் இறந்தவர்களின் குடும்பத்தினருக்குத் தேவையான உதவிகள் மற்றும் வாழ்வாதாரத்தினை பேணிக் காத்தல் தொடர்பான பணிகளை மேற்கொண்டு வருகிறது.

## 2. அயலகத் தமிழர்கள் நலன்

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகம் மூலம் அயலகத் தமிழர்களின் நலனுக்காக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 2.1 அயலகத் தமிழர்களின் நலனுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள்

**அ) முன் பயண புத்தாக்கப் பயிற்சி மையம்**

இராமநாதபுரம், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, தஞ்சாவூர், பெரம்பலூர், சிவகங்கை மற்றும் விழுப்புரம்

ஆகிய தமிழ்நாட்டின் 7 மாவட்டங்களில் முன்பயண புத்தாக்கப் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு, பணியின் பொருட்டு அயல்நாடுகளுக்குச் செல்லும் தமிழர்களுக்கு பாதுகாப்பான மற்றும் சட்டபூர்வமான புலம்பெயர்தலுக்கான பயிற்சியும், விழிப்புணர்வும் வழங்கப்படுகிறது. இம்மையங்கள் மூலமாக 31.08.2026 வரை 92,906 நபர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

**ஆ) தொலைபேசி உதவி மையம்**

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகத்தில் வெளிநாடு வாழ் தமிழர்களுக்காக 14.11.2023 முதல் "24x7 கட்டணமில்லா தொலைபேசி உதவி மையம்" செயல்பட்டு வருகிறது. வெளிநாடு வாழ் தமிழர்கள் அந்நாடுகளில் எதிர் கொள்ளும் பல்வேறு பிரச்சனைகளுக்கு உடனடியாக தீர்வுகாண இம்மையம் ஏற்படுத்தப்பட்டது. வெளிநாடு வாழ் தமிழர்களிடமிருந்து

பெறப்படும் மனுக்களுக்கு உடனடியாக தீர்வு கண்டு அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதே இம்மையத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும். இம்மையம் வாரத்தில் 7 நாட்களும் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. இம்மையம் தொடங்கப்பட்டதிலிருந்து 31.08.2026 வரை 28,045 அழைப்புகள் பெறப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**இ) சட்ட உதவி மையம்**

தமிழர்கள், பணியின் பொருட்டு அயல்நாடுகளுக்கு செல்வது சமீபகாலமாக கணிசமாக அதிகரித்து வருகிறது. இங்குள்ள பதிவுபெறாத முகவர்களின் உறுதியின் அடிப்படையில் அயல்நாடுகளுக்குச் சுற்றுலா நுழைவிசைவில் வேலைக்கு செல்லும் நபர்கள் கடும் இன்னலுக்கு உள்ளாகின்றனர். இப்பிரச்சனைகளுக்கு தீர்வு பெற அயல்நாடுகளில் சட்ட சிக்கல்களை சந்திக்கும்

தமிழர்களுக்கு உதவுவதற்காக அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம் மூலம் சட்ட உதவி மையம் அமைக்கப்பட்டது.

முதற்கட்டமாக பஹ்ரைன், சவுதி அரேபியா, ஓமன், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் மலேசியா ஆகிய ஐந்து அயல்நாடுகளில் தலா ஒரு சட்ட உதவி மைய ஒருங்கிணைப்பாளர் வீதம் மொத்தம் 5 நபர்கள் நியமிக்கப்பட்டும் மற்றும் அயலகத் தமிழர் நலத்துறையில் இரண்டு சட்ட ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டும் வெளிநாடு வாழ் தமிழர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்கூறிய பஹ்ரைன், சவுதி அரேபியா, ஓமன், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் உள்ள சட்ட உதவி மைய ஒருங்கிணைப்பாளர்களின் பதவிக் காலம் 31.05.2026 அன்று முடிவுபெற்றதாலும், புதியதாக குவைத் மற்றும் கம்போடியா ஆகிய நாடுகளுக்கு தலா ஒரு நபர் என மொத்தம் இரண்டு சட்ட உதவி மைய

ஒருங்கிணைப்பாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்ட நிலையிலும் ஆக மொத்தம் 7 சட்ட உதவி மைய ஒருங்கிணைப்பாளர் மற்றும் இரண்டு சட்ட ஆலோசகர் பணியிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**2.2 தாயகம் மீட்டல்**

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகமானது, அயல்நாடுகளில் சிக்கித் தவிக்கும் தமிழர்களைத் தாயகம் மீட்பது மற்றும் அயல்நாடுகளில் இறக்கும் தமிழர்களின் பூத உடல்களை இந்திய அரசு மற்றும் சம்பந்தப்பட்ட நாடுகளின் இந்தியத் தூதரகங்களின் உதவியுடன் தாயகம் கொண்டு வரும் பணிகளை மேற்கொள்கிறது. அதுமட்டுமின்றி, விமான நிலையம் வந்தடையும் தமிழர்களின் உடல்கள் தமிழ்நாடு அரசின் கட்டணமில்லா அமரர் ஊர்தி சேவை மூலம் அவர்களின் இல்லம் வரை கொண்டு செல்லப்பட்டு அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படுகிறது.

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகத்திற்கு ரூ.1 கோடி சுழல் நிதியாக வழங்கப்பட்டு அதன் மூலம் வெளிநாட்டில் சிக்கித்

தவிக்கும் தமிழர்களை மீட்டு தாயகம் திரும்புதல் மற்றும் பூத உடல்களை கொண்டு வருதல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அயல்நாடுகளில் இன்னலுற்ற தமிழர்களை தாயகம் மீட்பதற்காக 2025-2026ஆம் நிதியாண்டில் இந்நிதியிலிருந்து ரூ.22,89,317/- செலவிடப்பட்டுள்ளது. 01.04.2025 முதல் 31.08.2026 வரை 677 தமிழர்களின் பூத உடல்கள் தாயகம் கொண்டு வரப்பட்டன. அதில், 501 உடல்கள் தமிழ்நாடு அரசின் கட்டணமில்லா அமரர் ஊர்தி சேவை மூலம் இறந்தவர்களின் சொந்த ஊர்களுக்கு கொண்டு செல்லப்பட்டன. மீட்பு நடவடிக்கையின் விவரம் பின்வருமாறு:-

i. **ஜம்மு & காஷ்மீர் மாநிலத்தில் பஹல்காம் என்னும் இடத்தில் நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதலின் காரணமாக தமிழர்கள் மீட்பு (ஏப்ரல்-2025)**

தமிழ்நாடு அரசின் தொடர் முயற்சியின் காரணமாக, ஜம்மு & காஷ்மீர் மற்றும் பஞ்சாப் மாநிலங்களிலிருந்து 24.04.2025 முதல் 29.04.2025 வரை சுற்றுலா பயணிகளாக சென்ற 154 நபர்களும்,

உயர்கல்வி பயின்ற 242 மாணவ, மாணவியர்களும் புது தில்லி தமிழ்நாடு இல்லம் வாயிலாக, தமிழ்நாடு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வந்தடைந்த நபர்களுக்கு புது தில்லி, தமிழ்நாடு இல்லம் மூலம் இரயில் பயணச்சீட்டு, உள்ளூர் போக்குவரத்து, உணவு, தங்குமிடம் முதலிய ஏற்பாடுகளும், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம் மூலம் தமிழ்நாட்டில் விமான /இரயில் நிலையங்களிலிருந்து சொந்த ஊர் வரையிலான போக்குவரத்து மற்றும் பயணத்தின் போதான உணவு ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

**ii. இஸ்ரேல் மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையே ஏற்பட்ட போர் காரணமாக அங்கு சிக்கியிருந்த தமிழர்கள் மீட்பு (சூன் 2025)**

இஸ்ரேல் மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையே ஏற்பட்ட போர் காரணமாக, ஏராளமான தமிழர்கள் அங்கு சிக்கித் தவித்தனர். அதனைத் தொடர்ந்து இஸ்ரேல், ஈரான் நாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்கள் மற்றும் வெளியுறவுத் துறையுடன் இணைந்து 43 தமிழர்கள்

தமிழ்நாடு அரசின் செலவில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம் மூலம் தொடர்வண்டி பயணச்சீட்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டு புது தில்லியிலிருந்து பாதுகாப்பாக தமிழ்நாடு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

### iii. மதராசி கேம்ப்–புது தில்லி (18 ஜூன், 2025)

புது தில்லி மாநிலம், ஜங்க்புரா பகுதியில் பரபுல்லா ஆற்றின் கரையில் அமைந்திருந்த "மதராசி கேம்ப்" எனப்படும் குடிசைப் பகுதியில், கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து வந்த சுமார் 370 தமிழ்க் குடும்பங்கள், நீதிமன்ற உத்தரவினைத் தொடர்ந்து மதராசி கேம்ப் பகுதி இடிக்கப்பட்டதால், வீடுகளை இழந்தனர்.

மேலும், 18.06.2025 அன்று, புது தில்லியில் பாதிக்கப்பட்ட 370 தமிழர்களின் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில், சிறப்பு நிகழ்வாக வீடுகளை இழந்தவர்களுக்கு ரூ.50,00,000/– நிவாரண நிதியாக அதாவது, ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு முறை நிதியுதவியாக தலா

ரூ.8,000/- ரொக்கமாகவும் (ரூ.44,40,000/-) மற்றும் ரூ.4,000/- மதிப்பிலான, 25 கிலோ அரிசி, 10 கிலோ கோதுமை, 2 கிலோ சாம்பார் பருப்பு, 1 கிலோ பாசிப்பருப்பு, 2 கிலோ சர்க்கரை, 3 லிட்டர் சமையல் எண்ணெய், 1 கிலோ உப்பு, 250 கிராம் டீ தூள், சமையலுக்கான மசாலா பொருட்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் தொகுப்பும் வழங்கப்பட்டன.

**iv. கத்தார் நாட்டில் உயிரிழந்த தமிழருக்கு ரூபாய் ஐந்து இலட்சம் நிதியுதவி (31, ஆகஸ்ட், 2025)**

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், பக்கிரிபாளையம் கிராமம், ரஹமான்பேட்டையைச் சேர்ந்த திரு. நவாஸ் (வயது 35) என்பவர் கத்தார் நாட்டில் கடந்த 10 ஆண்டுகளாக கார் ஓட்டுநராகப் பணிபுரிந்துவந்த நிலையில், 25.08.2025 அன்று நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தார். உயிரிழந்த நவாஸ் அவர்களின் குடும்பத்தினருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ரூபாய் ஐந்து இலட்சம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கி உத்தரவிடப்பட்டது.

**v. நேபாள நாட்டிற்கு புனித யாத்திரை சென்று விபத்தில் சிக்கிய தமிழர்களுக்கு உதவி (மார்ச் 2026)**

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 24 நபர்கள், நேபாளத்திற்கு யாத்திரையாக சென்ற நிலையில், அவர்களின் பயணத்தின் போது, 14.03.2026 அன்று ஏற்பட்ட விபத்தில் 7 நபர்கள் உயிரிழந்தனர் மற்றும் 7 நபர்கள் காயமடைந்தனர்.

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகத்தின் ஒருங்கிணைந்த முயற்சிகளின் மூலம், நேபாளத்தில் உள்ள இந்தியத் தூதரகம் மற்றும் புது தில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லம் ஆகியவற்றுடன் இணைந்து, உயிரிழந்தவர்களின் உடல்கள் தமிழ்நாட்டிற்கு கொண்டு வரப்பட்டன. மேலும், காயமடைந்தவர்கள் பாதுகாப்பாக அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

### vi. மத்திய பிரதேசம், ஜபல்பூர் மாவட்டத்தில் ஏற்பட்ட படகு விபத்தில் சிக்கிய தமிழர்களுக்கு உதவி (ஏப்ரல் 2026)

மத்திய பிரதேசம், ஜபல்பூர் மாவட்டம், பார்கி அணையில் 30.04.2026 அன்று ஏற்பட்ட படகு விபத்தில் சுற்றுலாவிற்குச் சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 5 நபர்கள் உயிரிழந்தனர் மற்றும் 9 நபர்கள் உயிருடன் மீட்கப்பட்டனர்.

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம், புது தில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லம் மற்றும் மத்திய பிரதேச மாநில அரசு ஆகியவற்றுடன் இணைந்து, உயிரிழந்தவர்களின் உடல்கள் தமிழ்நாட்டிற்கு கொண்டு வரப்பட்டன. மேலும், உயிருடன் மீட்கப்பட்ட நபர்கள் பாதுகாப்பாக அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

**vii. கத்தார் நாட்டில் ராஸ் லஃபான் தொழிற்பேட்டைப் பகுதியில் உள்ள தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்த 3 தமிழர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி உதவி (சூன் 2026)**

கத்தார் நாட்டின் ராஸ் லஃபான் தொழிற்பேட்டையில் 21.06.2026 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்தனர். அவர்களின் பூத உடல்கள் 26.06.2026 அன்று தமிழ்நாட்டிற்கு கொண்டு வரப்பட்டு குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டன. உயிரிழந்தவர்களின் குடும்பங்களின் பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு, தலா ரூ.10,00,000/– வீதம், மொத்தம் ரூ.30,00,000/– முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

### viii. வியட்நாம் படகு விபத்து (சூலை 2026)

வியட்நாம் நாட்டிற்கு 48 தமிழர்கள் உட்பட 108 இந்தியப் பயணிகள் சுற்றுலா சென்றனர். அவர்கள் சென்ற படகுகளில் ஒரு படகு, 11.07.2026 அன்று காலை சுமார் 10:30 மணியளவில் கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. அவர்களில் 10 தமிழர்கள் உட்பட 15 பேர் இறந்ததாக தகவல் கிடைக்கப்பெற்றது.

தொடர் நடவடிக்கையின் விளைவாக, படகு விபத்தில் உயிர் பிழைத்த 34 தமிழர்கள் 12.07.2026 அன்றும் மற்றும் 4 தமிழர்கள் 13.07.2026 அன்றும் சென்னை விமான நிலையம் வந்தடைந்தனர். விபத்தில் உயிரிழந்த 15 நபர்களின் பூத உடல்கள் இந்திய அரசு ஏற்பாடு செய்த வாடகை விமானம் (Chartered Flight) மூலம் மும்பை விமான நிலையத்திற்கு 13.07.2026 அன்று கொண்டு வரப்பட்டன. அங்கிருந்து 10 தமிழர்களின் பூத உடல்களைத் தமிழ்நாடு கொண்டுவருவதற்கு அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை மூலம் ரூ.4,70,362/– செலவில் விமானப் பயணச்சீட்டு ஏற்பாடு செய்யப்பட்டது.

மேற்படி விபத்தில் உயிரிழந்த 4 நபர்களின் பூத உடல்கள் சென்னை விமான நிலையத்திற்கும் மற்றும் பிற 6 நபர்களின் பூத உடல்கள் கோயம்புத்தூர் விமான நிலையத்திற்கும் 14.07.2026 அன்று கொண்டு வரப்பட்டன.

இறந்தவர்களின் பூத உடல்கள் அரசின் கட்டணமில்லா அமரர் ஊர்திகள் மூலம் அவர்களின் சொந்த ஊர்களுக்கு கொண்டு செல்லப்பட்டு குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

ix. **நேபாள வெள்ளப் பெருக்கில் சிக்கிய தமிழர்களுக்கான மீட்பு நடவடிக்கைகள் (ஆகஸ்ட் 2026)**

நேபாள நாட்டில் 26.08.2026 அன்று சீனப் பகுதியில் உள்ள மேல் லெண்டே ஆற்றுப் பகுதியில் பனிப்பாறை சரிவு காரணமாக ஏற்பட்ட மிகப்பெரிய வெள்ளம், நேபாளம்–திபெத் நாடுகளின் எல்லைப் பகுதியில் போடேகோஷி ஆற்றில் திடீரென பெருவெள்ளம் பெருக்கெடுத்து, ரசுவாகதி, திமுரே, சியாப்ருபேசி மற்றும் கீழ்ப்பகுதிகளைப் பாதித்துள்ளது.

நேபாள நாட்டிற்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த 305 நபர்கள் கைலாஷ் யாத்திரைக்காக சென்றுள்ளனர். திடீரென ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் தமிழர்கள் உட்பட பலர் காணாமல் போனதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், அங்கு சிக்கியுள்ள தமிழர்களுக்கு உதவிடும் வகையிலும், தமிழ்நாட்டில் உள்ள அவர்களது உறவினர்கள் தொடர்பு கொள்ள ஏதுவாகவும் அவசர தொலைபேசி எண்கள் அறிவிக்கப்பட்டன. அயலகத் தமிழர் நலத்துறை மற்றும் புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில் 24x7 அவசரக் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டு, 31.08.2026 வரை 2,253 அழைப்புகள் கையாளப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மீட்புப் பணிகளை நேரில் ஒருங்கிணைக்க அமைச்சர்கள் குழு புது தில்லிக்கு அனுப்பப்பட்டனர். இந்திய வெளியுறவு செயலாளர் திரு. விக்ரம் மிஸ்ரி, I.F.S. அவர்களை நேரில் சந்தித்து, இந்திய வெளியுறவுத்துறை மற்றும் நேபாளத்தில் உள்ள இந்தியத் தூதரகத்துடன் நெருங்கிய

ஒருங்கிணைப்புடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாதிக்கப்பட்டவர்களுக்கான விமானப் பயணக் கட்டணம் முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்கிறது. நேபாளம் செல்லும் உறவினர்களுக்கு இலவசப் பயணச் சீட்டு மற்றும் காத்மாண்டுவில் தங்கியுள்ள 3 தமிழ்நாடு அரசு அலுவலர்கள் மூலம் அவர்களுக்கான உதவிகள் வழங்கப்படுகிறது. சென்னை வந்தடையும் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு, தேவையின் அடிப்படையில் அரசு சார்பாக, வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு அவர்களது இல்லங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

### 2.3 அயலகத் தமிழர்களின் பங்களிப்பை அங்கீகரித்தல் மற்றும் கலாச்சார மற்றும் அறிவுசார் ஒருங்கிணைப்பை ஊக்குவித்தல்

#### அ) அயலகத் தமிழர் தினம்

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12–ஆம் நாள் அயலகத் தமிழர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிகழ்வானது பல்வேறு நாடுகளில் வசிக்கும்

தமிழர்களின் பங்களிப்புடன் அவர்களை ஒருங்கிணைக்கும் விதமாகவும், ஊக்குவிக்கும் விதமாகவும் அமையும். மேலும், நமது நாட்டின் பாரம்பரியம், கலை, இலக்கியம் மற்றும் பண்பாட்டினை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு செல்வதே இந்நிகழ்வின் நோக்கமாகும்.

மேலும், ஐந்தாம் ஆண்டு "அயலகத் தமிழர் தினம் 2026" 11.01.2026 மற்றும் 12.01.2026 ஆகிய இரு நாட்கள் "தமிழால் இணைவோம் தரணியில் உயர்வோம்" என்ற கருப்பொருளில் நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், 58 நாடுகள் மற்றும் இந்தியாவின் 17 மாநிலங்களில் உள்ள 207 தமிழ்ச்சங்கங்களைச் சார்ந்த 1,552க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டனர்.

இரண்டாம் முறையாக, தமிழின் வளர்ச்சிக்காக அயல்நாடுகளில் பெரும் பங்காற்றுபவர்களுக்கான 'தமிழ் மாமணி' விருதுடன் ரூ.10 இலட்சம்

வழங்கப்பட்டது. மேலும், மூன்றாம் ஆண்டாக "கணியன் பூங்குன்றனார் விருது" அறிவியல் தொழில்நுட்பம், மருத்துவம், கல்வி, சமூக மேம்பாடு, மகளிர், வணிகம், சிறந்த பண்பாட்டு தூதுவர் ஆகிய ஏழு பிரிவுகளில் சிறந்து விளங்கும் 8 அயலகத் தமிழர்களுக்கு வழங்கப்பட்டன.

**ஆ) அயலகத் தமிழர்களுக்கு தமிழ் பயிற்றுவித்தல்**

வெளிநாடுகளிலும் பிற இந்திய மாநிலங்களிலும் வசிக்கும் குழந்தைகளுக்கு தமிழ் மொழியைக் கற்பிக்கும் முயற்சி அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகம் மூலம் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ் இணையக் கல்விக்கழகம் மூலம் தமிழ் படிப்புகளை மூன்று வெவ்வேறு நிலைகளில் தமிழ் இணையக் கல்விக்கழகம் வழங்குவது போன்று தமிழ்ச் சங்கங்கள் மூலம் நிறுவப்பட்ட 200 மையங்கள் மூலம் இப்பாடங்கள் இணைய வழியில் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கு 2022–2023–ஆம் நிதி ஆண்டிற்கு ரூபாய் 12 இலட்சமும் 2023–2024–ஆம் நிதி ஆண்டிற்கு ரூபாய் 44 இலட்சமும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு தமிழ் இணையக் கல்விக்கழகத்திற்கு வழங்கப்பட்டு அவர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 8 இந்திய மாநிலங்கள் மற்றும் 14 அயல்நாடுகளில் தமிழ் இணையக் கல்விக் கழகம் மூலம் மையங்கள் தொடங்கப்பட்டு இதுவரை (31.08.2026) 1,401 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

**இ) வேர்களைத் தேடி**

தமிழ் பாரம்பரியத்தின் வேர்களுடன் தொடர்பைப் புதுப்பிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும், வெளிநாட்டில் குடியேறிய தமிழர்களின் வாரிசுகளில் 200 இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு தமிழ்நாட்டில் பண்பாட்டு சுற்றுலா பயணத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது.

இதுவரை நான்கு கட்டங்களாக நடைபெற்ற இத்திட்டத்தில் தென் ஆப்ரிக்கா, உகாண்டா, பிஜி, இந்தோனேஷியா, மொரிஷியஸ், ஆஸ்திரேலியா, மாலத்தீவு, கனடா, மியான்மர், மலேசியா, இலங்கை, பிரான்சு, ஜெர்மனி, நார்வே, அமெரிக்கா மற்றும் ரீயூனியன் ஆகிய 16 நாடுகளில் இருந்து 292 இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு, 15 நாட்களுக்கு தமிழகத்தின் முக்கியச் சுற்றுலா, வரலாற்று மற்றும் பண்பாட்டு சிறப்புமிக்க இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டும், தமிழ்நாட்டின் கலை, பண்பாடு குறித்தும் விளக்கப்பட்டது. இவர்கள் அவர்களது நாடுகளில் தமிழ்நாட்டின் பண்பாட்டு தூதுவர்களாக செயல்படுவர்.

இச்சுற்றுப்பயணத்தில் தமிழ்நாட்டின் தொல்பொருள் தலங்கள், வரலாற்று நினைவுச் சின்னங்கள், யுனெஸ்கோவின் உலக பாரம்பரியச் சின்னங்கள் மற்றும் கல்வி நிலையங்களுக்கு அழைத்து செல்லப்பட்டனர். தமிழர் கலை, பண்பாடு,

தொல்லியல் ஆராய்ச்சி ஆகிய துறைகளில் வல்லுநர்களுடன் உரையாடும் வாய்ப்பும் மாணவர்களுக்கு கிடைத்தது.

**ஈ) தமிழ்ச்சங்கங்களுக்கு நிதியளித்தல்**

புலம்பெயர்ந்த தமிழர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்ச்சங்கங்களை அங்கீகரித்து, பின்னர் அவர்களின் நிகழ்ச்சிகளுக்கு நிதியுதவி வழங்கப்படும் என தமிழக அரசால் அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் தமிழ்ச்சங்கங்கள் மூலம் தமிழ் மொழி, கலை மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்துதல் மற்றும் புலம்பெயர்ந்த தமிழர்களிடையே ஒற்றுமையை வளர்ப்பது ஆகிய இரண்டு குறிக்கோள்களை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**உ) எனது கிராமம்**

அயல்நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் பங்களிப்பினைக் கொண்டு தமிழ்நாட்டில் அவர்களது சொந்த ஊர்களை மேம்படுத்தும் "எனது கிராமம்" திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக இதுவரை 4 நன்கொடையாளர்களிடம் இருந்து ரூ.60 இலட்சம் நிதி பெறப்பட்டுள்ளது.

நன்கொடையாளர்களின் வேண்டுகோளின்படி, இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டம், ஓடக்கரை பள்ளிவாசல் தெருவில் தெருவிளக்குகள் மற்றும் கண்காணிப்புக் கருவி (CCTV) அமைக்கப்பட்டுள்ளது மற்றும் கீழக்கரை நகராட்சியில் வார்டு எண். 1 முதல் 21 வரை கழிவுநீர் தொட்டி மூடிகள் அமைக்கப்பட்டு உள்ளன. மேலும், கீழக்கரை நகராட்சியில் வார்டு எண் 17–இல் கடற்கரைப்பூங்கா அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது.

மேலும், சிவகங்கை மாவட்டம் கண்ணமங்கலப்பட்டி ஊராட்சி, காப்பாரப்பட்டி கிராமத்தில் ஒரு சுகாதார நிலையம் மற்றும் பெண்களுக்கான புதிய போர்வெல் மற்றும் குளியல் தொட்டி கட்டும் பணி முடிவடைந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து, கடலூர் மாவட்டம் வாகூர் கிராமத்தில் சமுதாய நலக் கூடம் அமைப்பதற்கான நடவடிக்கையும் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் வடக்கு இலந்தைகுளம் கிராமத்தில் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு கலையரங்கம் கட்டுவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**ஊ) அயல்நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு தமிழ்க் கலைகளையும் தமிழ் மொழியையும் நேரடியாகக் கற்பித்தல். (தமிழ் மணம்)**

நூறு ஆசிரியர்கள் மற்றும் தமிழ் கலைஞர்களுக்கு பயிற்சி கொடுத்து, இவர்களை அயலகத் தமிழர்கள் வாழும் பகுதிகளுக்கு தேவைக்கேற்ப அனுப்ப ஒரு திட்டம் உருவாக்கப்படும். இந்த பயிற்றுநர்கள், அந்த பகுதியிலிருக்கும் தமிழ்ச் சங்கங்களுடன் இணைந்து, தமிழ் மொழியையும், தமிழ்க் கலைகளையும் 2 ஆண்டுகளுக்கு நேரடிப்பயிற்சி வகுப்புகள் மூலமாக நடத்துவார்கள். இதற்கு ஆகும் செலவையும் தமிழ்நாடு அரசே ஏற்கும். இதற்காக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

முதற்கட்டமாக, தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் பரிந்துரைக்கப்பட்ட 10 தமிழ் ஆசிரியர்களுக்கு, அயலகத் தமிழர் தின விழாவிலும் (12.01.2026), கலை பண்பாட்டுத்துறையால்

பரிந்துரைக்கப்பட்ட 10 கலை பயிற்றுநர்களுக்கு 16.02.2026 அன்றும் பணி ஆணைகள் வழங்கப்பட்டன.

இதுவரை (31.08.2026) மலாவி, உகாண்டா மற்றும் சீஷெல்ஸ் நாடுகளுக்கு முறையே ஒரு தமிழ் ஆசிரியரும் மாலத்தீவு, கம்போடியா, மலாவி மற்றும் சீஷெல்ஸ் நாடுகளுக்கு ஒரு கலை ஆசிரியரும், மேலும், மியான்மர் நாட்டிற்கு இரண்டு கலை ஆசிரியர்களும், பிஜி நாட்டிற்கு இரண்டு தமிழ் ஆசிரியர்களும் ஆகமொத்தம் பதினொன்று தமிழ் மற்றும் கலை ஆசிரியர்கள் ஏழு நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இதர ஆசிரியர்களை தொடர்புடைய நாடுகளுக்கு அனுப்பும் பணிகள் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்துடன் (OMCL) இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்காக தமிழ் மணம் வலைதளம் உருவாக்கப்பட்டு ஆசிரியர் மற்றும் மாணவர்களின் செயல்பாடுகள் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

## எ) தமிழர் தடம்

தமிழ்நாட்டிலிருந்து பல்வேறு காலகட்டங்களில், புலம்பெயர்ந்து அயல்நாடுகளில் நிரந்தரமாகவும், தற்காலிகமாகவும் வாழ்ந்து வரும் தமிழர்கள் குறித்து விரிவான ஆய்வுகள் மேற்கொண்டு தரவுகள் முழுமையாக ஆவணப்படுத்தப்படும் என்றும், தமிழ்நாட்டிலிருந்து இடம்பெயர்ந்த தமிழர்களுக்கான தரவுத்தளம் உருவாக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக 'தமிழர் தடம்' என்ற வலைதளம் உருவாக்கப்பட்டு, அதில் பதிவிடப்படும் கட்டுரைகளை மதிப்பீடு செய்ய ஒரு வருட காலத்திற்கு, இரண்டு பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டனர்.

இந்நேர்வில், பதிவிடப்படும் படைப்புகள் இரண்டு மதிப்பாய்வாளர்களாலும் ஆய்வுசெய்யப்பட்ட பின்னர், கட்டுரைகள் 'தமிழர் தடம்' வலைதளத்தில் வெளியிடப்பட்டு வருகிறது.

**ஏ) தமிழ்க் கல்வியும் பண்பாட்டுத் தொடர்ச்சியும்**

அயலகத் தமிழர்களுக்கு தமிழ்க்கல்வியையும், கலைகளையும் கலாச்சாரத்தையும் போதிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அரசால், தமிழ் இணையக் கல்விக்கழகம் வாயிலாக வகுக்கப்பட்ட தமிழ்ப் பாடப் புத்தகங்களை, ஒவ்வொரு நிலையிலும் 2 புத்தகங்கள் வீதம் 10 புத்தகங்கள் கொண்ட தொகுப்பு சுமார் 100 அமைப்புகளுக்கு வழங்குவதற்காக ரூ.21,23,000/- தமிழ்நாடு அயலகத் தமிழர் நல வாரிய நிதியிலிருந்து செயல்படுத்துவது தொடர்பாக அரசால் அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**ஐ) உலகளாவிய அறிவு பரிமாற்றத் திட்டம்**

வெளிநாடு வாழ் தமிழர்கள் பெற்றுள்ள அறிவு, அனுபவம், புதிய முயற்சிகள் மற்றும் தொழில்நுட்பங்களை தமிழ்நாட்டில் உள்ள கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் உள்ள மாணவர்களுக்கு இணையவழி மூலமாகவோ, சமூக

ஊடகங்கள் மூலமாகவோ பகிர்வதற்காக புதிய இணையதளம் உருவாக்குவதற்காக ரூ.12.66 இலட்சத்திற்கான நிதி திருத்திய வரவு செலவுத் திட்டத்தில் (RE 2026–2027) ஒதுக்கீடு செய்யப்படும் என்று அரசால் ஆணை வெளியிடப்பட்டு, அது தொடர்பான பணிகள் நடைபெற்று வருகின்றன.

**2.4 புலம்பெயர் தமிழர் நல வாரியம் அமைத்தல்**

தமிழக அரசால் கடந்த 06.10.2021 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பில், புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலும், இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும் வாழும் தமிழர் நலன் காக்க "தமிழ்நாடு அயலகத் தமிழர் நல வாரியம்" அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, 2011–ஆம் ஆண்டு வெளிநாடு வாழ் தமிழர் நலச் சட்டம் உட்பிரிவு 10(1)–கீழ், தலைவர் உள்ளிட்ட 15 உறுப்பினர்கள் கொண்ட "தமிழ்நாடு அயலகத் தமிழர் நல வாரியம்" அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரிய அலுவலகம் சென்னை – 600 006, கல்லூரி சாலை, DPI வளாகம், ஈ.வி.கி சம்பத் மாளிகையில், 10வது தளத்தில்,

செயல்பட்டு வருகிறது. இவ்வாரியத்தில் கீழ்காணும் நலத்திட்டங்கள் அயலகத் தமிழர்களுக்காக நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

### i. அடையாள அட்டை (ID Card) பதிவு

அயலகத் தமிழர் (Non-Resident Tamil – NRT) அடையாள அட்டை, வெளிநாடுகளிலும், இந்தியாவில் தமிழ்நாட்டிற்கு வெளியே வசிக்கும் அயலகத் தமிழர்களையும் தமிழ்நாடு அரசையும் இணைக்கும் முக்கிய இணைப்பாக செயல்படுகிறது. இதன் மூலம், தமிழ்நாடு அயலகத் தமிழர் நல வாரியம் (TN Non-Resident Tamils Welfare Board) வழங்கும் பல்வேறு சேவைகள் மற்றும் வசதிகளை பெற முடியும்.

#### a) தகுதி

அயலகத் தமிழர் அடையாள அட்டை பெறுவதற்கு வயது 18 முதல் 55 வரை இருக்க வேண்டும். மேலும், ஆதார் அட்டை, இந்திய ஓட்டுநர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை, பான் அட்டை, இந்திய கடவுச்சீட்டு (வெளிநாட்டில் வசிக்கும் NRT–களுக்கு கட்டாயம்) போன்ற ஆவணங்களில் ஏதேனும் ஒன்று இருக்க வேண்டும்.

இந்தியாவில் (தமிழ்நாட்டிற்கு வெளியே) வசிக்கும் அயலகத் தமிழர் என்றால், கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக தமிழ்நாட்டிற்கு வெளியே வசித்து வருவதை உறுதிப்படுத்தும் வாடகை ஒப்பந்தம், மின்சாரம்/ தொலைபேசி கட்டணம் ரசீது அல்லது நியமனக் கடிதம் போன்ற ஆவணம் வழங்க வேண்டும்.

வெளிநாட்டில் வசிக்கும் அயலகத் தமிழர் என்றால், செல்லுபடியாகும் இந்திய கடவுச்சீட்டு, விசா மற்றும் வேலை அனுமதி ஆகியவை இருத்தல் அவசியம்.

மேலும், வெளிநாடுகளிலிருக்கும் 355 தமிழ் சங்கங்களுடன் இவ்வாரிய பணியாளர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் சேவைகள் குறித்தும், வெளிநாடுகளில் சிறப்பு முகாம்கள் நடத்தி அடையாள அட்டைகளைப் பெறவும், நடவடிக்கை எடுக்குமாறு தொடர்ந்து கேட்டுக் கொள்ளப்பட்டு வருகிறது.

31.08.2026 வரை 34,746 நபர்களுக்கு அயலகத் தமிழர் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

### ii. காப்பீட்டு திட்டம்

அயலகத் தமிழர் காப்பீட்டுத் (NRT Insurance) திட்டத்தின் மூலம், விபத்து மற்றும் கடுமையான நோய்கள் போன்ற சூழ்நிலைகளில் அயலகத் தமிழர் நல வாரிய உறுப்பினர்களுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும் நிதி பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. விபத்துகளுக்கு ரூ.5 இலட்சம் அல்லது ரூ.10 இலட்சம் வரை காப்பீடும், கடுமையான நோய்களுக்கு ரூ.1 இலட்சம் முதல் ரூ.5 இலட்சம் வரை காப்பீடும் வழங்கப்படுகிறது.

பயனாளர்கள் தேர்வு செய்யக்கூடிய காப்பீட்டுத் திட்டங்கள் இரண்டு வகையாக உள்ளன: தனிநபர் விபத்து காப்பீடு (கட்டாயம்), கடுமையான நோய் காப்பீடு (விருப்பத்தேர்வு)

#### a) தகுதி

விண்ணப்பதாரரிடம் அயலகத் தமிழர் அடையாள அட்டை இருக்க வேண்டும். விபத்து காப்பீட்டிற்கு வயது வரம்பு 18–70, கடுமையான நோய் காப்பீட்டிற்கு வயது வரம்பு 18–60 ஆகும். மேலும், செல்லுபடியாகும்

ஆதார் அட்டை/ இந்திய கடவுச்சீட்டு/ ரேஷன் அட்டை/ ஓட்டுநர் உரிமம் மற்றும் பான் அட்டை இருக்க வேண்டும்.

**b) காப்பீட்டுத் திட்டத்தின் பயன்கள்**

விரிவான காப்பீட்டு பாதுகாப்பு – புற்றுநோய், சிறுநீரக செயலிழப்பு, பக்கவாதம் உள்ளிட்ட பல கடுமையான நோய்களுக்கு பாதுகாப்பு, குறைந்த காப்பீட்டு தவணைத் தொகை (Premium) மற்றும் பல்வேறு விருப்பத் தேர்வுகள் உள்ளன.

இக்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 31.08.2026 வரை 4,050 நபர்களுக்கு காப்பீட்டு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

**iii. கல்வி உதவித் திட்டம்**

அயலகத் தமிழர்களுக்கு கல்வி உதவித் திட்டம் என்பது, மறைந்த வறிய நிலையில் உள்ள அயலகத் தமிழர் நல வாரிய உறுப்பினர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு கல்வி உதவி வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.

ஒரு குழந்தைக்கு ரூ.4,000 – 12,000 வரையும், குடும்பத்திற்கு அதிகபட்சம் இரண்டு குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

**a) தகுதி**

விண்ணப்பதாரின் பெற்றோர் அயலகத் தமிழராக இருந்து, அவர்கள் மறைந்த நேரத்தில் செல்லுபடியாகும் அயலகத் தமிழர் அடையாள அட்டை இருந்தால், அவர்களின் பிள்ளைகள் தகுதி பெறுவார்கள். விண்ணப்பதாரர் இந்தியாவில் வசித்து வர வேண்டும்.

விண்ணப்பதாரர் பின்வரும் கல்வி நிலைகளில் ஏதேனும் ஒன்றில் பயின்று இருக்க வேண்டும்:–

11ஆம் வகுப்பு அல்லது 12ஆம் வகுப்பு, தொழிற்பயிற்சி நிறுவனம் (ITI) அல்லது பாலிடெக்னிக், கல்லூரியில் பட்டப்படிப்பு அல்லது முதுநிலைப் பட்டப்படிப்பு எந்த பாடநெறியிலும் இருக்கலாம்.

### iv. திருமண உதவித் திட்டம்

அயலகத் தமிழர்களுக்கு திருமண உதவித் திட்டம் என்பது, மறைந்த வறிய நிலையில் உள்ள

அயலகத் தமிழர் நல வாரிய உறுப்பினர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு ரூ.20,000/- திருமண உதவி வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.

**a) தகுதி**

அயலகத் தமிழரின் குழந்தையாக இருக்க வேண்டும். மேலும், அவர் மறைந்த சமயத்தில் அவரது அயலகத் தமிழர் அடையாள அட்டை செல்லுபடியாக இருந்திருக்க வேண்டும். விண்ணப்பதாரர் தற்போது இந்தியாவில் வசித்து வர வேண்டும். திருமணத்தின்போது மணமகனுக்கு குறைந்தது 21 வயதும், மணமகளுக்கு குறைந்தது 18 வயதும் பூர்த்தியாகியிருக்க வேண்டும். மேலும், முதல் திருமணத்திற்கு மட்டுமே இந்த உதவி வழங்கப்படும். குறைந்தது 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு 5ஆம் வகுப்பு வரை படித்திருப்பது போதுமானது. இதன் மூலம், தகுதியான ஒரு குடும்பத்திற்கு அதிகபட்சமாக இரண்டு குழந்தைகளுக்கு மட்டுமே வழங்கப்படும்.

## v. ஓய்வூதியத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் வெளிநாட்டில் பணியாற்றச் சென்று எதிர்பாராத விதமாக உயிரிழந்த வறிய நிலையில் உள்ள அயலகத் தமிழர் நல வாரிய உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ஆதரவளிக்கும் நோக்கில், மாதந்தோறும் ரூ.1,000/– ஓய்வூதியம் வழங்கப்படும்.

### a) தகுதி

பயனாளர், உயிரிழந்தவரின் சார்புள்ள குடும்ப உறுப்பினராக இருக்க வேண்டும். மேலும், மறைந்த நபர் இறந்த சமயத்தில் அவரது அயலகத் தமிழர் அடையாள அட்டை செல்லுபடியாக இருந்திருக்க வேண்டும். குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.1.20 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். குடும்பத்தில் எவரும் அரசு பணியில் இருக்கக் கூடாது. தனிநபர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியற்றவர்கள். பயனாளிகள் வருமான வரி

செலுத்துபவர்களாக இருக்கக் கூடாது. சுற்றுலா விசா அல்லது வேலை அல்லாத பிற நோக்கங்களுக்காக வெளிநாடு சென்று எதிர்பாராத விதமாக உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் இம்மாதாந்திர ஓய்வூதியத்திற்கு தகுதியற்றவர்கள். மத்திய அல்லது மாநில அரசால் செயல்படுத்தப்படும் எந்த ஓய்வூதியத் திட்டத்திலும் பயனாளிகள் ஓய்வூதியம் பெறுபவர்களாக இருக்கக் கூடாது.

**vi. இறப்பு நிவாரண நிதி**

வெளிநாடுகளில் வேலைவாய்ப்பிற்காக செல்லும் அயலகத் தமிழர்கள் பெரும்பாலும் உடல் திறன் கொண்ட தொழிலாளர்களாக பணியாற்றுகின்றனர். அவர்கள் தங்கள் குடும்பங்களின் முக்கிய வருமான ஆதாரமாக இருப்பதால், வெளிநாட்டில் பணியாற்றும் போது அவர்கள் எதிர்பாராத விதமாக உயிரிழந்தால், அவர்களை சார்ந்த குடும்பத்தினருக்கு கடுமையான பொருளாதார பாதிப்பு ஏற்படுகிறது. இத்திட்டமானது அயலகத் தமிழர் வெளிநாட்டில் பணியாற்றும் போது உயிரிழப்பதால் குடும்பத்தின் முதன்மை வருமான

ஈட்டுபவரை இழக்கும் வறிய நிலையில் இருக்கும் அயலகத் தமிழர் நல வாரிய உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) நிதியுதவி வழங்குவதை நோக்கமாக கொண்டது.

**a) தகுதி**

வெளிநாடுகளில் பணியாற்றும்போது உயிரிழந்தவர் அயலகத் தமிழர் நல வாரியத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும், உயிரிழந்தவர், உயிரிழந்த நேரத்தில் செல்லுபடியாகும் மற்றும் சட்டபூர்வமான ஆவணங்களுடன் வெளிநாட்டில் பணியாற்றி வந்திருக்க வேண்டும்.

**b) தேவையான ஆவணங்கள்**

இத்திட்டத்தில் பயன்பெறுவதற்கு உயிரிழந்தவரின் பாஸ்போர்ட், வெளிநாட்டில் வழங்கப்பட்ட இறப்பு சான்றிதழ், விசா, வேலை அனுமதி (Work Permit), வாரிசு சான்றிதழ், வருமானச் சான்றிதழ் மற்றும் ஆதார் அட்டை போன்ற ஆவணங்கள் அவசியம்.

31.08.2026 வரை ஒரு பயனாளிக்கு இறப்பு நிவாரண நிதியாக ரூ.1,00,000/- வழங்கப்பட்டுள்ளது.

## 3. முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள் நலன்

மாநிலத்தில் உள்ள 29 மாவட்டங்களில் 105 முகாம்களில் (திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள இரண்டு சிறப்பு முகாம்கள் உட்பட) 31.08.2026 அன்றுள்ள நிலவரப்படி 19,751 குடும்பங்களைச் சேர்ந்த 56,589 இலங்கைத் தமிழர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இந்திய அரசு, மாநில அரசின் வழிகாட்டுதல்களுடன் நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளின்படி, இருப்பிடம், உணவு, குடிநீர், மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு நிவாரண உதவிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

### 3.1 வீடுகள் கட்டுதல் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல்

இலங்கைத் தமிழர்களுக்கான 10,469 வீடுகளைப் புதியதாக கட்டும் திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக 3,510 வீடுகள் கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதலும், ரூ.186.99 கோடி நிதி ஒதுக்கீடும் செய்து

ஆணையிடப்பட்டு, அதன் தொடர்ச்சியாக, 19 மாவட்டங்களில் உள்ள 35 முகாம்களில் 3,510 புதிய வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டமாக 3,959 வீடுகள் கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதலும், இதற்கான செலவினத் தொகை ரூ.236,43,00,000/-க்கு நிர்வாக ஒப்புதலும், ரூ.222,59,78,500/-க்கு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டு, 19 மாவட்டங்களில் உள்ள 35 முகாம்களில் 3,959 புதிய வீடுகள் கட்டுவதற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு ஆணைகள் வழங்கப்பட்டு, 15 மாவட்டங்களில் உள்ள 28 முகாம்களில் கட்டிமுடிக்கப்பட்ட 2,702 வீடுகள் திறந்து வைக்கப்பட்டு பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 1,257 வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் தற்போது பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

மூன்றாம் கட்டமாக ரூ.238 கோடி செலவில் 3,000 வீடுகளைக் கட்டுவதற்கான நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 13 மாவட்டங்களில் உள்ள 23 முகாம்களில் புதிய வீடுகள் கட்டுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

**3.2 இலங்கைத் தமிழர் வாழ்வாதார மேம்பாட்டுநிதி**

சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன்கீழ் அறிவித்தபடி, 28 மாவட்டங்களில் உள்ள இலங்கைத் தமிழர் முகாம்களில் பழுதுபார்ப்பு, பராமரிப்பு மற்றும் இதர அடிப்படை வசதிகளை மேம்படுத்திட 2026-2027ஆம் நிதியாண்டில் ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டதில், ரூ.3,26,44,391/- மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**3.3 தொழிற்கூடங்கள்**

10 மாவட்டங்களில் உள்ள 10 இலங்கைத் தமிழர் முகாம்களில் செயல்பட்டுவரும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.3 கோடி செலவில் 10 தொழிற்கூடங்கள் கட்டிமுடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மேலும், மண்டபம் முகாமில் இரண்டு தொழிற்கூடங்கள் கட்டுவதற்கு ரெப்கோ வங்கியின் உதவியுடன் அவ்வங்கியின் சமுதாய முதலீட்டு நிதியிலிருந்து (CSR) ரூ.48,30,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதில் முதல் தவணையாக (30%) ரூ.14,49,000/- மற்றும் இரண்டாவது தவணையாக (35%) ரூ.16,90,500/- மண்டபம் தனித்துணை ஆட்சியரின் வங்கி கணக்கிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தொழிற்கூடங்களுக்கான கட்டுமானப் பணிகள் மேற்கூரை அமைக்கும் பணி வரை நிறைவு பெற்றுள்ளன.

### 3.4 அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல்

8 மாவட்டங்களில் உள்ள 13 முகாம்களில் சாலைகள் மற்றும் கழிவுநீர்க்கால்வாய்கள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மேற்கொள்வதற்காக ரூ.20,27,91,050/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 11 மாவட்டங்களில் உள்ள 16 முகாம்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திட மாவட்ட ஆட்சியர்களுக்கு ரூ.20,27,87,304/- விடுவிப்பு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 3.5 கணினி வசதியுடன் கூடிய படிப்பகம் அமைத்தல்

இலங்கைத் தமிழர் முகாம்களில் வசிக்கும் மாணவர்களிடையே கல்வி பயிலும் ஆர்வத்தை ஊக்குவிக்கும் விதமாகவும், இடைநிற்றலை தவிர்க்கவும் முதற்கட்டமாக 9 மாவட்டங்களில் உள்ள 9 முகாம்களில் கணினி வசதியுடன் கூடிய படிப்பகம் அமைப்பதற்கு, ஒரு கட்டடத்திற்கு ரூ.20.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.1.80 கோடி செலவில், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதியிலிருந்து படிப்பகங்கள் கட்டுவதற்கு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையருக்கு ஆணைகள் வழங்கப்பட்டு, 7 மாவட்டங்களில் கட்டுமானப்பணிகள் முடிவுற்றுள்ளன. அதில், பெரம்பலூர் மாவட்டம், கவுல்பாளையம் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் ஒரு படிப்பகம் 30.08.2026 அன்று மாண்புமிகு பள்ளிக்கல்வி மற்றும் செய்தி (ம) மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் அவர்களால் திறந்து

வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 2 மாவட்டங்களில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், கணினி வசதியுடன் கூடிய படிப்பகங்களுக்கு தேவையான உபகரணங்களை கொள்முதல் செய்ய ஒரு படிப்பகத்திற்கு ரூ.1,99,500/– வீதம் 9 படிப்பகத்திற்கு ரூ.17,95,500/– தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களுக்கு விடுவிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**3.6 மகளிர் உரிமைத் தொகை திட்டம்**

தமிழ்நாடு முழுவதும் உள்ள 103 இலங்கைத் தமிழர் முகாம்களில் வசிக்கும் சுமார் 14,396 குடும்பத் தலைவிகளுக்கு மகளிர் உரிமைத்தொகை பிப்ரவரி 2024 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

**3.7 பாத்திரங்கள்**

தமிழ்நாட்டில் 29 மாவட்டங்களில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு, சேலம் இந்திய

உருக்காலை நிறுவனத்திடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியர்கள் மூலம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை 5 வகையான 8 எண்ணிக்கையிலான சமையல் பாத்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 2025–2026ஆம் நிதி ஆண்டில் 19,594 குடும்பங்களுக்கு ரூ.2,47,06,662/– செலவில் பாத்திரங்கள் வழங்கப்பட்டன.

**3.8 மகளிர் சுய உதவிக் குழுக்கள்**

தமிழ்நாட்டில் 29 மாவட்டங்களில் உள்ள 103 இலங்கைத் தமிழர் முகாம்களில் வசிக்கும் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக, மொத்தம் ரூ.7,76,65,125/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 628 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஒரு குழுவிற்கு ரூ.1,25,000/– வீதம் ரூ.7,75,91,500/– சுழல் நிதி மற்றும் சமுதாய முதலீட்டு நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2024–2025ஆம் ஆண்டில் 200 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்காக ரூ.2,50,00,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 31.08.2026 வரை 102 குழுக்களுக்கு ரூ.1,20,75,000/– விடுவிக்கப்பட்டுள்ளது.

## 3.9 திறன் மேம்பாட்டுப் பயிற்சி

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், அவர்களது வேலைவாய்ப்புத் தகுதியினை உயர்த்திக் கொள்ளவும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படும் என்ற அறிவிப்பின்படி, 31.03.2023 வரை இரண்டு ஆண்டுகளில் 2,415 இலங்கைத் தமிழர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, 2023–2024ஆம் நிதியாண்டில் 39 இலங்கைத் தமிழர்கள் திறன் மேம்பாட்டுப் பயிற்சியும், 260 இலங்கைத் தமிழர்கள் முந்தைய கற்றலை அங்கீகரித்தல் (RPL) பயிற்சியும் பெற்றிருந்தனர். அதனைத் தொடர்ந்து, 31.08.2026 வரை 2,444 நபர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சியும், 1,385 நபர்களுக்கு முந்தைய கற்றலை அங்கீகரித்தல் (Recognition of Prior Learning) பயிற்சியும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) மூலம் வெற்றிகரமாக அளிக்கப்பட்டுள்ளது. அவர்களுள் 2,049 நபர்கள் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

மேலும், மறுவாழ்வு முகாம்களில் வீடுகள் கட்டும் பணியில் இலங்கைத் தமிழர்கள் பங்கேற்பதை உறுதிசெய்யும் வகையில், பயிற்சி பெற விருப்பம் தெரிவித்த 10 மாவட்டங்களைச் (திருப்பூர், திருவள்ளூர், தென்காசி, திருவண்ணாமலை, புதுக்கோட்டை, சேலம், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், ராமநாதபுரம் மற்றும் விருதுநகர்) சேர்ந்த 415 இலங்கைத் தமிழர்கள், கட்டுமானம், கம்பி வளைத்தல் (bar bending) மற்றும் வர்ணம் பூசுதல் போன்ற பணிகளில் 'முந்தைய கற்றலை அங்கீகரித்தல்' (RPL) பயிற்சிக்காக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கு (TNSDC) பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

திறன் மேம்பாட்டுப் பயிற்சி திட்டத்தின் கீழ், நிர்ணயிக்கப்பட்ட இலக்கைக் காட்டிலும் அதிகமான எண்ணிக்கையிலான இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

**3.10 மனநல உதவி சேவைகள் வழங்குதல்**

2024-2025ஆம் ஆண்டில், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருத்துவத் துறையுடன் இணைந்து, தமிழ்நாடு முழுவதும் 103 முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் மனநலத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் மனநல விழிப்புணர்வு மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக, 29 மாவட்டங்களில் உள்ள இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வு முகாம்களில் 458 முறை பார்வையிடப்பட்டு 8,867 இலங்கைத் தமிழர்களுக்கு மனநல ஆலோசனை உதவி சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

**3.11 துணிமணிகள்**

இந்திய அரசு நிர்ணயித்த விலையில் ஆடைகள் மற்றும் போர்வைகளை வழங்க முடியாததால், 2021-2022ஆம் ஆண்டு முதல் ரூ.1,790/-லிருந்து ரூ.3,473/- ஆக உயர்த்தப்பட்ட விலையில் வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டிற்கு

(2026–2027) விலையில்லா துணிமணிகள் வழங்குவதற்கான கொள்முதல் ஆணைகள் தமிழ்நாடு துணிநூல் கழகத்திற்கு 13.07.2026 அன்று வழங்கப்பட்டுள்ளது. மேலும், இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வழங்கப்படும் போர்வையும் நடப்பாண்டில் வழங்கப்பட உள்ளது,

**3.12 இலவச எரிவாயு மற்றும் மானியம்**

இலவச சமையல் எரிவாயு இணைப்பு அதாவது எரிவாயு உருளை மற்றும் அடுப்பு 7,065 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு ரூ.2,73,00,299/– செலவில் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின் மூலமாக ஆண்டிற்கு 5 சிலிண்டர்களுக்கு ஒரு சிலிண்டருக்கு ரூ.400/– வீதம் மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2025–2026ஆம் ஆண்டிற்கு இலவச எரிவாயு மானியமாக 16,244 குடும்பங்களுக்கு ரூ.3,24,88,000/– வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டிற்கு மானியத் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

### 3.13 பணக்கொடை

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர பணக்கொடை மாநில அரசால் உயர்த்தி வழங்கப்படும் என்று சட்டமன்றப் பேரவை விதி எண்.110–இன்கீழ் அறிவிக்கப்பட்டது. அவ்வறிவிப்பின்படி கீழ்காணும் உயர்த்தப்பட்ட வீதத்தில் மாதாந்திர பணக்கொடை வழங்க ஆணை வெளியிடப்பட்டது.

| வ. எண். | பிரிவு | பழைய தொகை (ரூ.) | 01.09.2021 முதல் புதிதாக உயர்த்தப்பட்ட தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1. | குடும்பத் தலைவர் | 1,000/– | 1,500/– |
| 2. | ஒவ்வொரு கூடுதல் உறுப்பினர் (12 வயது அதற்கு மேல்) | 750/– | 1,000/– |
| 3. | சிறியவர்கள் (12 வயதிற்கு உட்பட்டவர்கள்) | 400/– | 500/– |

மேலும், 2026–2027ஆம் நிதியாண்டிற்கு பணக்கொடைக்காக ரூ.77,30,00,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆகஸ்ட், 2026 வரை பணக்கொடை வழங்கப்பட்டுள்ளது.

### 3.14 அரிசி மானியம்

இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கும், தமிழ்நாடு அரசினால் ஒவ்வொரு மாதமும் இலவசமாக அரிசி வழங்கப்பட்டு வருகிறது. இலங்கைத் தமிழர் குடும்பங்களில் வசிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில், பெரியவர்களுக்கு 12 கிலோ அரிசியும், 8 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு 6 கிலோ அரிசியும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்படும் அரிசியில், முதல் 20 கிலோ அரிசி இலவசமாகவும், அதற்குக் கூடுதலாக வழங்கப்படும் அரிசி ஒரு கிலோ ரூ.0.57 என்ற விலையிலும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி எண் 110–ன் கீழ், முகாம்வாழ்

இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்படும் மொத்த அரிசியும் இலவசமாக வழங்கப்படும் எனவும், அதற்கான கூடுதல் செலவினம் ரூ.19 இலட்சத்தினை மாநில அரசே ஏற்கும் என அறிவித்ததைத் தொடர்ந்து, அதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்படும் மொத்த அரிசியும் தற்போது இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. அது மட்டுமல்லாது, முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு எண்ணெய், சர்க்கரை போன்ற அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

### 3.15 ஈமக்கிரியை நிதியுதவி

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள் முகாம் பதிவிலிருந்து இறந்தால் அவர்களின் இறுதி சடங்குகள் செய்ய ஏதுவாக அரசு ஈமக்கிரியை உதவித்தொகை ரூ.5,000/- அவரது குடும்பத்தினரிடம் வழங்கப்பட்டு வருகிறது.

### 3.16 கல்வி உதவித் தொகை

தமிழக மாணவர்களுக்கு வழங்கப்படுவது போலவே, முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கும் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. முகாம்களில் வசிக்கும் 12ஆம் வகுப்பு வரை பயிலும் (31.08.2026 அன்று உள்ளபடி) சுமார் 11,973 மாணவர்களுக்கும் இலவச கல்வித் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, முகாம்வாழ் மாணவர்களுக்கும் விலையில்லா சீருடைகள், மதிய உணவு, புத்தகங்கள் மற்றும் இலவச பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் போன்றவற்றில் உயர்கல்விக்காக இலங்கைத் தமிழ் மாணவர்கள் பொதுப்பிரிவுக்கான கலந்தாய்வு மூலம் ஒற்றைச் சாளர முறையில் தகுதியின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

சட்டமன்றப் பேரவை விதி எண்.110—ன்கீழான அறிவிப்பின்படி உயர்த்தப்பட்ட வீதத்தில் கல்வி உதவித் தொகை பின்வருமாறு வழங்கப்பட்டு வருகிறது:

<table>
<tr><th>வ. எண்</th><th>படிப்பு</th><th>கல்வித் தொகை (ரூ.)</th><th>உயர்த்தப்பட்ட கல்வித் தொகை (2021—2022 முதல்) (ரூ).</th></tr>
<tr><td>1.</td><td>பாலிடெக்னிக்</td><td>2500</td><td>10,000</td></tr>
<tr><td>2.</td><td>இளநிலை கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்பு</td><td>3,000</td><td>12,000</td></tr>
<tr><td>3.</td><td>இளநிலை தொழில் சார்ந்த படிப்புகள் (மதிப்பெண் அடிப்படையில் முதல் 50 மாணவர்களைத் தவிர்த்து ஏனைய மாணவர்களுக்கு)</td><td>5,000</td><td>20,000</td></tr>
<tr><td>4.</td><td>இளநிலை தொழில் சார்ந்த படிப்புகள் (பொறியியல் படிப்பு பயிலுவதற்குத் தேர்ச்சி பெற்ற மாணவர்களில் மதிப்பெண் அடிப்படையில் முதல் 50 மாணவர்களுக்கு மட்டும்)</td><td rowspan="2">5,000</td><td rowspan="2">பொறியியல் படிப்புகளில் சேரும், மதிப்பெண் அடிப்படையில் முதல் 50 மாணவர்களுக்கான முழு கல்விக் கட்டணம் மற்றும் விடுதி (அ) போக்குவரத்து கட்டணங்களை அரசே ஏற்றுக் கொள்ளும்</td></tr>
<tr><td>5.</td><td>வேளாண்/ வேளாண் பொறியியல் பட்டப் படிப்பில் மதிப்பெண்</td></tr>
</table>

| வ. எண் | படிப்பு | கல்வித் தொகை (ரூ.) | உயர்த்தப்பட்ட கல்வித் தொகை (2021–2022 முதல்) (ரூ). |
|---|---|---|---|
| | அடிப்படையில் முதல் 5 மாணவர்களுக்கு மட்டும் | | என்றும், அதுமட்டுமின்றி, வேளாண்மை/ வேளாண்மைப் பொறியியல் படிக்கும் மதிப்பெண் அடிப்படையில் முதல் 5 மாணவர்களுக்கு முதுநிலை பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கு முழு கல்விக் கட்டணம் மற்றும் விடுதி (அ) போக்குவரத்துக் கட்டணங்களை அரசே ஏற்றுக்கொள்ளும். இவை தவிர, மாணவர்களை ஊக்குவிக்கும் விதமாக முதுகலை (அனைத்து பாடப் பிரிவுகள்) பட்டப் பிரிவில் சேரும் அனைத்து முகாம்வாழ் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கும் கல்வி மற்றும் விடுதி (அ) போக்குவரத்துக் கட்டணங்களை அரசே ஏற்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 6. | முதுநிலை பட்டப்படிப்பு | 6,000 | |

**கல்வி உதவித் தொகை வழங்கப்பட்ட விவரம்**

2023–2024–ஆம் ஆண்டில் 1,944 மாணவ/ மாணவியர்களுக்கு (இளநிலை கலை மற்றும் அறிவியல், பாலிடெக்னிக் மற்றும் இளநிலை தொழில்சார்ந்த படிப்பு, இளங்கலை பொறியியல், வேளாண் பொறியியல் மற்றும் முதுநிலை) ரூ.3,76,05,365/– கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு பயனடைந்துள்ளனர்.

| **வ. எண்** | **மாணவ / மாணவியர் பயிலும் படிப்பு** | **மாணவர்களின் எண்ணிக்கை** | **தொகை (ரூ)** |
|---|---|---|---|
| 1. | இளநிலை கலை மற்றும் அறிவியல், பாலிடெக்னிக் மற்றும் இளநிலை தொழில் சார்ந்த படிப்பு | 1,641 | 2,11,70,000 |
| 2. | பொறியியல் | 185 | 1,26,18,667 |
| 3. | வேளாண் பொறியியல் | 3 | 1,65,000 |
| 4. | பட்டமேற்படிப்பு | 115 | 36,51,698 |
| | **மொத்தம்** | **1,944** | **3,76,05,365** |

2024–2025–ஆம் ஆண்டில் 1,997 மாணவ/ மாணவியர்களுக்கு (இளநிலை கலை மற்றும் அறிவியல், பாலிடெக்னிக் மற்றும் இளநிலை தொழில்சார்ந்த படிப்பு, இளங்கலை பொறியியல், வேளாண் பொறியியல் மற்றும் முதுநிலை) ரூ.4,02,18,641/– கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு பயனடைந்துள்ளனர்.

| வ. எண் | மாணவ / மாணவியர் பயிலும் படிப்பு | மாணவர்களின் எண்ணிக்கை | தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | இளநிலை கலை மற்றும் அறிவியல், பாலிடெக்னிக் மற்றும் இளநிலை தொழில் சார்ந்த படிப்பு | 1,711 | 2,31,28,000 |
| 2. | பொறியியல் | 182 | 1,28,54,423 |
| 3. | வேளாண் பொறியியல் | 4 | 2,60,000 |
| 4. | பட்டமேற்படிப்பு | 100 | 39,76,218 |
| | **மொத்தம்** | **1,997** | **4,02,18,641** |

**3.17 இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக தமிழர்கள் புதிய வருகை**

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் உணவுத் தட்டுப்பாட்டின் காரணமாக 22.03.2022 முதல் 13.11.2025 வரை வரப்பெற்ற 193 நபர்கள் இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் முகாமில் தங்க வைக்கப்பட்டு இவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் துணிமணிகள் இலவசமாகவும் நாள் ஒன்றுக்கு ரூ.115/– செலவில் உணவு இலவசமாகவும் வழங்கப்பட்டு வருகிறது.

**3.18 வெளிப்பதிவில் தங்கி உள்ள இலங்கைத் தமிழர்களின் விசாக்கட்டணம் மற்றும் மிகைத்தங்கல் அபராதத் தொகை தள்ளுபடி செய்தல்**

31.08.2026 வரை, வெளிப்பதிவில் தங்கியிருந்து இலங்கை செல்ல விருப்பம் தெரிவித்த 1,055 குடும்பங்களைச் சேர்ந்த 1,976 இலங்கைத் தமிழர்களுக்கு விசாக்கட்டணம் மற்றும் மிகைத்தங்கல் அபராதத் தொகை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

## 3.19 நீண்ட காலத் தீர்வுகளுக்கான ஆலோசனைக் குழு

1983–ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்கள் பல்வேறு காலகட்டங்களில் தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்தனர். அவர்கள் தமிழ்நாட்டின் 29 மாவட்டங்களில் உள்ள 103 முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். இந்த இலங்கைத் தமிழர்களின் குடியுரிமை உள்ளிட்ட நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு, 2021 அக்டோபர் 25 அன்று ஒரு ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது.

அந்தக் குழுவின் முயற்சிகளின் விளைவாக, 15 நபர்கள் சட்டப்பூர்வமாக இந்திய கடவுச்சீட்டுகளைப் பெற்றுள்ளனர். மேலும், 152 இலங்கைத் தமிழர்கள் தங்கள் சொந்தப் பெயர்களில் வாகனங்களைப் பதிவு செய்துள்ளனர்.

இவை தவிர, மாண்புமிகு இந்திய பிரதமருக்கு பிப்ரவரி 15, 2026 அன்று தமிழ்நாடு அரசு அனுப்பியுள்ள கடிதத்தில், கீழ்க்கண்டவற்றைப் பரிசீலனை செய்து சாதகமான முடிவுகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது:

a) இலங்கைத் தமிழர்களின் குடியுரிமை விண்ணப்பங்களை பரிசீலிக்கத் தடையாக உள்ள முந்தைய நிர்வாக உத்தரவை இரத்து செய்திடவேண்டும்.

b) தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு, சரிபார்க்கப்பட்ட அடையாள ஆவணங்களின் அடிப்படையில், குடியுரிமை அல்லது நீண்டகால விசா விண்ணப்பங்களுக்கு இலங்கைத் தமிழர்கள் விண்ணப்பிக்கும்போது, தற்போதைய நடைமுறையில் கடவுச்சீட்டு மற்றும் விசா தேவைகளை தள்ளுபடி செய்யும் நிர்வாக விளக்கத்தை வழங்க வேண்டும்.

c) மாவட்ட அளவில் உள்ள அலுவலர்களுக்கு (மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் கண்காணிப்பாளர்) குடியுரிமை மற்றும் நீண்ட கால விசா விண்ணப்பங்களை விரைவாக பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதற்கான உரிய அதிகாரங்களை வழங்க வேண்டும்.

d) 9.1.2015 வரை இந்தியாவில் வசித்துவரும் இலங்கைத் தமிழர்களை "சட்டவிரோதமாகக் குடியேறியவர்களாகக்" கருதக்கூடாது என்ற விளக்கத்தை அதிகாரப்பூர்வமாக அறிவிக்க வேண்டும்.

**4. தாயகம் திரும்பியோர்**

இந்திய வம்சாவழியைச் சேர்ந்த சுமார் 4,61,639 தமிழின மக்கள் இலங்கையிலிருந்தும், சுமார் 1,44,445 தமிழின மக்கள் 1964ம் ஆண்டு முதல் 1982 வரை பர்மாவிலிருந்தும், 2,055 தமிழின மக்கள் வியட்நாமிலிருந்தும் இந்தியாவிற்கு திரும்பியுள்ளனர். ஆரம்பகால கட்டத்தில் அவர்கள் மாநிலத்தில் உள்ள

தேயிலை மற்றும் ரப்பர் தோட்டங்களில் மறுவாழ்விற்காக குடியேற்றப்பட்டனர். அவர்களுக்கு நூற்பாலைகள் மற்றும் தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பிற்கான பல திட்டங்களைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகின்றது.

**4.1 ரெப்கோ வங்கி**

இலங்கை, பர்மா மற்றும் வியட்நாம் நாடுகளிலிருந்து தாயகம் திரும்பிய மக்களின் மறுவாழ்விற்காக ரெப்கோ வங்கி (தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் மேம்பாட்டு வங்கி) மத்திய அரசால் நிறுவப்பட்டு, மத்திய அரசு மற்றும் 5 தென்மாநில அரசுகளின் பங்கு முதலீடு கொண்டு இயங்கி வருகிறது. இந்த வங்கி முதன்முதலில் மெட்ராஸ் கூட்டுறவு சங்கங்களின் சட்டம், 53/1961ன்கீழ் 09.09.1969 அன்று பதிவு செய்யப்பட்டு, வங்கியின் நடவடிக்கைகள் 19.11.1969 முதல் துவங்கப்பட்டது. இந்த வங்கி மத்திய உள்துறை அமைச்சகத்தின் FFR பிரிவின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது.

தற்பொழுது வங்கி 108 கிளைகளை தென் மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் கொண்டு இயங்கி வருகிறது. இந்த வங்கியின் தலைமையிடம் சென்னையில் உள்ளது.

31.03.2026 அன்று வங்கியின் மூலதனத்தின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வ. எண். | முதலீட்டாளர்கள் | மூலதன தொகை (இலட்சங்களில்) | % |
|---|---|---|---|
| 1. | இந்திய அரசு | 7,632.00 | 50.01 |
| 2. | தமிழக அரசு | 713.00 | 4.67 |
| 3. | ஆந்திர பிரதேச அரசு | 104.77 | 0.69 |
| 4. | தெலுங்கானா அரசு | 74.88 | 0.49 |
| 5. | கேரள அரசு | 61.16 | 0.40 |
| 6. | கர்நாடக அரசு | 17.47 | 0.11 |
| 7. | தனி நபர்கள் | 6,657.55 | 43.63 |
| | மொத்தம் | 15,260.83 | 100.00 |

2025–2026ஆம் நிதியாண்டின் தமிழக அரசின் பங்கு மூலதனம் ரூ.7.13 கோடிக்கான 30% ஈவுத்தொகையான ரூ.2,13,90,000/–க்கான காசோலை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் 13.08.2026 அன்று ரெப்கோ வங்கியால் வழங்கப்பட்டது.

## 4.2 தாயகம் திரும்பியோர் அறக்கட்டளை

கடந்த 5 வருடங்களில் தாயகம் திரும்பியோருக்கு ரெப்கோ வங்கியின் மூலம் அளிக்கப்பட்ட உதவித் தொகைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

| வ.எண். | வருடம் | உதவித் தொகை (இலட்சங்களில்) |
|---|---|---|
| 1. | 2021-22 | 907.00 |
| 2. | 2022-23 | 781.00 |
| 3. | 2023-24 | 911.00 |
| 4. | 2024-25 | 1,405.00 |
| 5. | 2025-26 | 2,556.00 |

## 5. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் 30.11.1978ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு நிறுவனமாக தொடங்கப்பட்டு, வெளிநாட்டு வேலைநாடுநர்களை வெளிநாடுகளில் பணியமர்த்தும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் இந்திய கம்பெனிகள் சட்டம், 1956-ன்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனம் இந்திய

குடிபெயர்வோர் சட்டம் 1983–ன்கீழ் ஆட்சேர்ப்பு நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு வெளிநாட்டு வேலைகளில் பணியாளர்களை பணியமர்த்துவதற்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் உரிமம் பெற்றுள்ளது. இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.15 இலட்சம் மற்றும் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.50 இலட்சம் ஆகும்.

**5.1 செயல்பாடுகள்**

- வெளிநாட்டு வேலைநாடுநர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் பதிவு முகாம்கள் நடத்துதல்.
- வெளிநாட்டு வேலையளிப்பவர் சார்பாக நேர்காணல் ஏற்பாடு செய்து இந்நிறுவனத்தில் பதிவு செய்துள்ள வெளிநாட்டு வேலைநாடுநர்களை நேர்காணல் மற்றும் தேர்வு செய்வதற்கு கலந்து கொள்ளச் செய்தல்.
- வெளிநாட்டு வேலைக்கு தேர்வு செய்யப்பட்டோருக்கு சான்றிதழ் சான்றொப்பம் மற்றும் விசா பெறுவதற்கு உதவி புரிதல்.

- ECR கடவுச்சீட்டுகளுக்கு சென்னையில் உள்ள குடிபெயர்வோர் பாதுகாப்பு அலுவலகம் மூலம் குடியேற்ற அனுமதியைப் பெற்று தருதல்.
- தேர்வு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு வெளிநாடு செல்வதற்கு தேவையான பயண ஏற்பாடுகள் மேற்கொள்ளுதல்.
- அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் வெளி முகமை மூலமாக, ஒப்பந்த அடிப்படையில் அரசுத்துறைகள், மாநில பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் வாரியங்களுக்குப் பணியாளர்களைப் பணியமர்த்தி வருகின்றது.

## 5.2 பதிவு

வெளிநாட்டு வேலைநாடுநர்கள் வெளிநாட்டு வேலை வேண்டி பதிவு செய்வதற்கேதுவாக www.omcmanpower.tn.gov.in என்ற வலைதளம் இந்நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. 31.08.2026 அன்றமைந்தவாறு 10,445 நபர்கள் வெளிநாட்டு வேலை வேண்டி தங்களது பெயரைப் பதிவு செய்துள்ளனர்.

**5.3 வெளிநாட்டுப் பணியமர்த்தல்**

இந்நிறுவனம் தொடங்கப்பட்ட 1978ஆம் ஆண்டு முதல் இதுநாள் வரை 11,537 நபர்களை பல்வேறு நாடுகளில் பணியமர்த்தியுள்ளது. மேலும் 2026–2027ஆம் நிதியாண்டில் 35 நபர்களை சவுதி அரேபியா, குவைத், ஓமன், மலாவி, சீஷெல்ஸ், மாலத்தீவு, மியான்மர் மற்றும் கம்போடியா ஆகிய நாடுகளில் பணியமர்த்தியுள்ளது.

**5.4 வருவாய்**

2025–2026–ஆம் நிதியாண்டில், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் தணிக்கைக்கு முந்தைய வருவாய் ரூ.1.94 கோடியாகவும் மற்றும் தணிக்கைக்கு முன் ரூ.51 இலட்சம் லாபமாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

**6. முடிவுரை**

தமிழகத்தின் இலங்கைத் தமிழர் முகாம்களில், கௌரவமான, பாதுகாப்பான, மேம்படுத்தப்பட்ட தரத்துடன் கூடிய வாழ்க்கையை இலங்கைத் தமிழர்கள் வாழ்வதை உறுதி செய்யும் வகையில், போதுமான

குடியிருப்பு வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர், இலவச மின்சாரம் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் கல்வி, தொழில் மற்றும் வாழ்க்கைத்தரம் மேம்பாடு அடையத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் தமிழ்நாடு அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அயலகத் தமிழர்கள் நலன் மற்றும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இத்திட்டங்கள் அனைத்தும் பொது மற்றும் மறுவாழ்வுத் துறையால் செம்மையாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் வணிகம் தொடர்பாக அயல்நாடு சென்று வாழும் அயலகத் தமிழர்கள் நலன் காத்திடவும், தமிழ் மொழியின் தொன்மை, வரலாறு, கலை, இலக்கியம், பண்பாடு மற்றும் கலாசாரத்தின் பெருமைகளை உலகம் முழுவதும் பரப்பிடவும், இவற்றை அடுத்த தலைமுறை தமிழர்களுக்கு கொண்டுசெல்லும் பணிகளுக்காகவும்,

அயலகத் தமிழர் நல வாரியம் ஏற்படுத்தப்பட்டு, முழு வீச்சுடன் செயல்பட்டு வருகிறது.

அயலகத் தமிழர் நலன் மற்றும் முகாம் வாழ் இலங்கைத் தமிழர் நலன் காக்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசு மிகுந்த அக்கறையுடனும், முனைப்புடனும் செயல்பட்டு வருகிறது.

**க. தென்னரசு,**

**வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.